02.03.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண். 68/2022) திரு.ராஜா.

1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

எனது வழக்கில் 2ம் வகுப்பு வாரீசுதாரராக கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாசில்தாரிடம் வாரீசு கோரும் பகுதியில் முதல் வகுப்பு வாரீசாக கோரியுள்ளதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி வாரீசு சான்று பெறக்கூடாதென்ற நோக்த்தில் வட்டாட்சியரிடம் பொய்யான தகவலை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1,2 வாதிகளின் விலாசம் குறித்து ஆவணம் எதுவும் பிராதுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1,வா.சா.ஆ10ல் கண்ட முகவரி 2ம்வாதியின் முகவரியாக பிராதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எனக்குரிய ஆதாரர் அடையாள அட்டை அதில் தந்தை பெயர் ரத்தினம் என்பதாக காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ரத்தினம் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். அதில் 1ம்பிரதிவாதியை மனைவியாக காண்பித்து விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.,ஆ.4 கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வட்டாட்சியரின் மேலொப்பத்தில் வட்டாட்சியர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அதில் கணினியின் கையொப்பமும் இல்லை. அதில் 2 விலாசம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஒப்பீடுசெய்து குறியீடுசெய்யப்பட்டதாக தவறானது என்றும் ஒப்பீடு செய்வதற்குரிய அசல் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் அந்த ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 இரண்டு ஆவணங்களும் மாற்றிதழ் நான் வழக்கிற்காக உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 குடும்ப அட்டை நகல் எப்போது பெறப்பட்டது என்றால் ஜுன் 2005ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். குடும்ப அட்டையில் உள்ள பெயர் ஒரு அட்டையில் கண்டியிருப்பது செல்லத்தக்கதது ஆகும். ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப அட்டையில் இருக்குமானால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஜாதி சான்றிதழ் சங்கரன்கோவில் வட்டாட்சியர் வழங்கியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ஜாதி சான்றிதழில் நான் பிறந்து 15 ஆண்டுகள் கழித்து 13.05.2005ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.அந்த ஜாதி சான்றிதழில் MBC most back word class என்பதை பயன்படுத்தி தான் கல்லூரி படிப்பு முடித்து தற்போது அரசு கால்நடைமருத்துவதாக படித்து பணிபுரிந்து வருகிறேன்

என்றால் சரிதான். MBC ஜாதியினரை விட MBC most back word class கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு கூடுதல் வாய்பு கிடைக்கும் என்று சொன்னால் சரிதான். நான் ஜாதி சான்றிதழ் பெற வட்டாட்சியர் அலுவலகத்தில் என்ன ஆவணம் இணைத்து கொடுத்துள்ளேன் என்றால் எனது தந்தை வி.ஏ.ஓ.வாக இருந்ததால் அவர் தான் வாங்கிக்கொடுத்தார். வா.சா.ஆ.9 ஜாதி சான்றிதழ் பெறுவதற்கு என்ன ஆவணம் இணைத்து கொடுக்கப்பட்டது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். நாங்கள் சங்கரன்கோவிலில் வசித்து வந்ததற்கான அடையாள அட்டை எதுவும் உள்ளதா என்றால் குடும்ப அட்டை வா.சா.ஆ.7 மட்டும் உள்ளது. அதை தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 13.05.2005 ல் குடும்ப அட்டைக்கு முன்பு பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 பிறப்பு சான்று நான் பிறந்து 10 ஆண்டுகள் கழித்து வாங்கப்பட்டது என்றால் எனது தந்தை தான் வாங்கிக்கொடுத்தார். அந்த பிறப்பு சான்றிதழ் தெற்கு கழுகுமலையில் பிறந்ததாக விலாசம் குறிப்பிட்டியிருப்பதாக தெற்கு கழுகுமலையில் குடியிருந்தை காட்டக்கூடிய வேறு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ம் வழக்கிற்காக மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் உண்மையான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 10 வரையிலான ஆவணங்கள் அசல் ஆவணங்களை தாக்கல் செய்தால் மெய்த்தன்மையை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் அசல் ஆவணமாக காண்பித்து நகலை குறியீடு செய்து விட்டு அசலை பெற்று சென்று விட்டேன் என்றால் சரியல்ல. குறிஞ்சாங்குளம் அருகில் உள்ள வெள்ளாண்குளத்தை சேர்ந்த சியான் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 1 ம்வாதிக்கு ஏற்கனவே வேறு ஒருவருடன் திருமணம் நடைபெற்று அது தற்போது வரை தீர்க்கப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. ரத்தினம் என்பவருக்கும்,1 ம்பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணம் ஊர்ஜிதத்தில் இருந்து வருங்காலத்தில் 1 ம்வாதிக்கும்,ரத்தினத்திற்கும் நடைபெற்றதாக சொல்லும் திருமணம் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ரத்தினம் என்பவர் அரசு ஊழியர் என்பதால் முதல் திருமணம் ஊர்ஜிதத்தில் இருக்கும் போது 2 ம் திருமணம் செய்தால் நன்நடத்தை விதிகளுக்கு புறம்பானது என்றுசொன்னால் சரியல்ல. 1 ம்வாதிக்கும், ரத்தினத்திற்கும் நடைபெற்றதாக சொல்லும் திருமணம் பொய்யானது என்றால் சரியல்ல. அதன் மூலமாக

2,3 வாதிகள் பிறந்தாக சொல்லுவதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

வாதிகளாகிய நாங்கள் ரத்தினத்தின் உண்மையான வாரீசுகள் கிடையாது என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் ரத்தினத்துடன் சேர்ந்து வாழ்ந்தாக சொல்லுவதும் பொய் என்றால் சரியல்ல. ரத்தினத்தின் ஓய்வூதியம் மற்றும் இதர பலன்களை பெறுவதற்கு இந்த வாதிகள் சட்டப்படியானவர்கள் இல்லை என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி மட்டுமே ரத்தினத்தின் சட்டப்படியான வாரீசு என்று சொன்னால் சரியல்ல. 3ம்பிரதிவாதி அலுவலகத்திலிருந்து வாரீசு சான்றிதழ் சம்பந்தமாக விசாரணை செய்து வாக்மூலம் எதுவும் பெற்றார்களா என்றால் இல்லை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள். ரத்தினத்தின் வாரீசு என்று கோருவதற்கு வாதிளாகிய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் எங்களுக்கு எந்தவித பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு வியாஜ்ஜியமூலம் இல்லை என்றாலும் வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
02.03.2024.